சமத்துவ கஞ்சி களையம் திருவிழா

குன்னூர் ஆர்செடின் மேல் பகுதி ஸ்ரீ முனீஸ்வரர் ராஜராஜேஸ்வரி அம்மன் கோயிலில் 21-ஆம்ஆண்டு சமத்துவ கஞ்சி களையம் திருவிழா நேற்று நடைபெற்றது. இதையொட்டி ஆற்றங்கரையில் இருந்து கரகம் எடுத்து வந்து கஞ்சி வார்த்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

பள்ளிகள் இடையே நடந்த

கைப்பந்து, கால்பந்து போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு

கோத்தகிரி, ஆக. 17: கோத்தகிரியில் ரோட்டரி கிளப் மற்றும் ஹில்போர்ட் பள்ளி இணைந்து நடத்திய 11ம் ஆண்டு பள்ளிகளுக்கிடையான கைப்பந்து மற்றும் கால்பந்து போட்டிகள் நடைபெற்றன.

கோத்தகிரியில் ரோட்டரி கிளப் மற்றும் ஹில்போர்ட் பள்ளி இணைந்து நடத்திய 11ம் ஆண்டு பள்ளிகளுக்கிடையான கைப்பந்து மற்றும் கால்பந்து போட்டிகள் ஹில்போர்ட் பள்ளி மைதானத்தில் நடைபெற்றன.

இப்போட்டியில் நீலகிரி மாவட்டத்தில் இருந்து 22க்கும் மேற்பட்ட பள்ளிகளை சேர்ந்த 19 வயதுக்கு கீழ், 17 வயதுக்கு கீழ் என ஆண், பெண்களுக்கு என 2 பிரிவுகளாக போட்டிகள் நடைபெற்றன.

இதில் மொத்தம் எட்டு இறுதி போட்டிகள் நடைபெற்ற நிலையில் 19 வயதுக்கு கீழ் உள்ள ஆண்கள் பிரிவு கைப்பந்து போட்டியில் கீழ் கோத்தகிரி அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் சி.எஸ்.ஐ பள்ளி

கள் மோதின. இதில் கீழ் கோத்தகிரி அரசு மேல்நிலைப்பள்ளி வெற்றி பெற்றது. பெண்கள் பிரிவில் ஹில்போர்ட் பள்ளி மற்றும் மகாத்மா காந்தி பள்ளிகள் மோதின. இதில் ஹில்போர்ட் பள்ளி வெற்றி பெற்றது.

17 வயதுக்கு கீழ் கைப்பந்து இறுதி போட்டியில் எச்.ஆர்.எம் பள்ளி மற்றும் புனித அந்தோனியார் சோலூர்மட்டம் பள்ளிகள் மோதியதில் புனித அந்தோனியார் பள்ளி அணி வெற்றி பெற்றது. பெண்கள் பிரிவில் எச்.ஆர்.எம் பள்ளியும் விஸ்வசாந்தி பள்ளியும் மோதிதெில் எச்.ஆர்.எம் அணி வெற்றி பெற்றது.

கால்பந்து போட்டியில் 19 வயதுக்கு கீழ் ஆண்கள் பிரிவு இறுதி போட்டியில் ஹில்போர்ட் பள்ளி மற்றும் ஆல்பா ஜிகே பள்ளி அணிகள் மோதின.

இதில் ஆல்பா ஜிகே அணி வெற்றி பெற்றது,. பெண்கள் பிரிவில் நீலகிரி மெட்ரிக் பள்ளி மற்றும் ஹில்போர்ட் பள்ளி அணிகள் மோதின. இதில் ஹில்போர்ட் பள்ளி வெற்றி பெற்றது. 17 வயதுக்கு கீழ் கால்பந்து இறுதி போட்டியில் ஆண்கள் பிரிவில் மகாத்மா காந்தி பள்ளியும்,விஸ்வசாந்தி பள்ளியும் மோதின இதில் மகாத்மா காந்தி பள்ளி வெற்றி பெற்றது.

பெண்கள் பிரிவில் ஜோசப் பள்ளி மற்றும் பெஸ்ட் பப்ளிக் பள்ளி மோதியதில் ஜோசப் பள்ளி வெற்றி பெற்றது. ஹில்போர்ட் பள்ளியில் நடைபெற்ற இப்போட்டியில் ஹில்போர்ட் பள்ளி தாளாளர் ரவிக்குமார், ரோட்டரி கிளப் கவர்னர் இளங்குமரன் தலைமை ஏற்றார். எச்.ஆர்.எம் குழு தலைவர் ராஜேஷ் சந்தர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வெற்றி கோப்பைகள், பதக்கங்கள், சான்றிதழ்களை வழங்கினார். பரிசளிப்பு விழாவிற்கு பள்ளி முதல்வர் சந்தியா வரவேற்றார். இறுதியாக பள்ளியின் துணை முதல்வர் ஷப்னா நன்றி கூறினார்.

உப்பட்டி அஞ்சலகத்தில் வாடிக்கையாளர்கள் பாதிப்பு

பந்தலூர். ஜூன் 17: பந்தலூர் தாலுகா உப்பட்டி பகுதியில் உள்ள அஞ்சலகம் மூலம் உப்பட்டி, புஞ்சவயல், நெல்லியாளம், பொன்னானி, அம்மங்காவு, சேலக்குன்னு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வசிப்போர் பயன்பெற்று வருகின்றனர்.

கடிதங்கள் அனுப்புதல், கடிதங்கள் பெறுதல், சிறுசேமிப்புகணக்குகள், குழந்தைகள் சேமிப்பு கணக்குகள், பள்ளி மாணவர்கள் சேமிப்பு கணக்குகள், அஞ்சலக காப்பீடு என பலவேறு பண வர்த்தனைளும், பணம் அனுப்புதல், வெளியூரில் பணிபுரிவோர் பெற்றோருக்கு பணம் அனுப்பும் நிலையில் பணம் பெறுதல், பதிவு அஞ்சல், விரைவு அஞ்சல் என பல்வேறு சேவைகள் பெற்றுவருகின்றார்.

குறிப்பாக சிலர் இன்னும் அஞ்சலகம் மூலமே பென்ஷன் பணம் பெற்று வருகிறார்கள் வயதான வர்கள் பலரும் தங்கள் சேமிப்பை அஞ்சலத்தில் வைத்து பராமரித்து வருகின்றார்கள். மேலும் முக்கிய ஆவணங்களான ஆதார் அட்டை பெறுதல், வங்கி ஏடிஏம் கார்டுகள் வட்டி நகை ஏல அறிவிப்பு உள்ளிட்ட முக்கிய தகவல் பரிமாற்றங்கள் அஞ்சலகம் மூலமே நடைபெறுகிறது.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக வாடிக்கையாளர்கள் அஞ்சலகத்திற்கு சென்றால் எந்தவித பணிகளும் நடைபெறுவது இல்லை. காரணம் இணையத்தளம் குறைபாடு மற்றும் சேமிப்பு கணக்கில் முறைகேடுகள் நடந்துள்ளதாக தெரியவருகிறது. அதனால் அஞ்சல் துறை மூலம் குழு அமைத்து ஆய்வு மேற்கொண்டுவருகின்றனர். சேமிப்புகணக்கில் பணம் செலுத்தியவர்கள் பணம் கிடைக்குமா என்று அச்சத்தில் உள்ளனர் அதனால் வாடிக்கையாளர்கள் சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

ரோஜா பூங்கா சாலையில் உள்ள அபாயகரமான மரங்களை அகற்ற கோரிக்கை

ஊட்டி, ஆக. 17: நீலகிரி மாவட்டத்தில் ஆண்டு தோறும் ஜூன் மாதம் துவங்கி இரு மாதங்கள் தென்மேற்கு பருவமழை பெய்யும். இச்சமயங்களில் பலத்த சூறாவளி காற்றுடன் கூடிய மழை பெய்யும். குறிப்பாக, ஊட்டி மற்றும் குந்தா தாலுகா விற்குட்பட்ட பகுதிகளில் காற்றின் வேகம் சற்று அதிகமாக காணப்படும்.

இதனால், பல்வேறு பகுதிகளிலும் மரங்கள் விழுந்து போக்குவரத்து பாதிப்பது வாடிக்கை. அதேபோல், சில இடங்களில் மரங்கள் பொதுமக்கள் அல்லது வாகனங்களின் மேல் விழுந்து விபத்து ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படுவது வழக்கம்.

இம்முறையும் கடந்த மாதம் துவங்கி ஒன்றரை மாத காலமாக பெய்த மழையால் பல்வேறு பகுதிகளிலும் மரங்கள் விழுந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அதேபோல், பல்வேறு பகுதிகளிலும் வாகனங்களின் மீது மரங்கள் விழுந்து விபத்து ஏற்பட்டது. கூடலூரில் தேயிலை தோட்ட தொழிலாளி மீது மரம் விழுந்து உயிரிழந்தார். மற்றொரு தொழிலாளி காயம் அடைந்தார்.

அதேபோல், ஊட்டியில் கார்களின் மீது மரங்கள் விழுந்ததால் இருவர் காயமடைந்தனர். எனவே, சாலையோரங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் உள்ள அபாயகரமான மரங்களை அகற்ற வேண்டும் என பொதுமக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இதன் பேரில் தற்போது வருவாய்த்துறை அதிகாரிகள் அபாயகரமான மரங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இருந்த போதிலும் பல இடங்களில் அபாயகரமான மரங்கள் அகற்றப்படாமல் உள்ளது. சில இடங்களில் சுற்றுலா பயணிகளுக்கு விபத்து ஏற்படுத்தும் வகையில் ராட்சத கற்பூர மரங்கள் காணப்படுகிறது. இந்நிலையில், நாள்தோறும் ஊட்டி ரோஜா பூங்காவிற்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்துச் செல்கின்றனர். ஊட்டி ரோஜா பூங்கா செல்லும் சாலையில் பல இடங்களில் கற்பூர மரங்கள் காணப்படுகிறது. இவைகள் மழைக்காலங்களில் விழும் அபாயம் நீடிக்கிறது. எனவே, இந்த மரங்களை அகற்ற மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் சுற்றுலா ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஊட்டி ரோஜா பூங்கா சாலையில் பல்வேறு இடங்களில் உள்ள அபாயகர மரங்களை வெட்டி அகற்ற வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

ஊட்டி புனித மோட்சராக்கினி தேவாலயத்தின் 184வது ஆண்டு விழா

ஊட்டி மேரிஸ்ஹில் பகுதியில் மோட்சராக்கினி தேவாலயத்தில் 184வது விழா விமர்சையாக நடந்தது.

ஊட்டி, ஆக. 17: ஊட்டி புனிதமோட்சராக்கினி ஆலயத்தின் 184வது ஆண்டு விழா மிகசிறப்பாக நடைபெற்றது.

ஊட்டி அருகேயுள்ள மேரிஸ் ஹில் பகுதியில் புனிதமோட்சராக்கின ஆலயம் உள்ளது. இங்கு 184வது ஆண்டு விழா கடந்த 7 ஆம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கியது. நாள் தோறும் மாலை ஜெபமாலை நவநாள் திருப்பலி மற்றும் சிறப்பு மறையுரை நடைப்பெற்றது.

15ம் தேதி பங்கின் ஆண்டு திருவிழாவான அன்னை மரியாளின் விண்ணேற்புநாள் சிறப்பிக்கப்பட்டது. காலை சிறப்பு திருப்பலி பாதிரியார்கள் அடைக்கலம் அமிர்தராஜ், பெனடிக்ட் ஆகியோர் தலைமையில் நடந்தது. காலை 9 மணிக்கு மறைமாவட்ட முதன்மை குரு கிறிஸ்டோபர் லாரன்ஸ் தலைமை வகித்து இசை யமது பாடல் குறுந்தகட்டை வெளிட்டார். தொடர்ந்து, கூட்டு திருப்பலி முதன்மை குரு கிறிஸ்டோபர் லாரன்ஸ் தலைமையில் நடந்தது.

பங்கு குரு செல்வநாதன், மறைமாவட்ட கணக்காளர் ஸ்டீபன் லாசர், ஜோசப் பள்ளியின் தலைமை ஆசிரியர் வென்ஸ்லஸ் ஆர்தர், ஆயரின் செயலர் அந்தோணி ராஜ், பிராங்கிளின் ஆகியோர் கலந்து கொண்டனர். மதியம் 3 மணிக்கு அசிஜோ தலைமையில் மலையாள திருப்பலி நடை பெற்றது. மாலை சிறப்பு திருப்பலிக்கு பின் தேர் பவனி நடை பெற்றது. மேரிஸ்ஹில் பகுதியில் நடந்த இந்த தேர் பவனியை அனைத்து மக்களும் கண்டு ரசித்தனர்.

மத நல்லிணக்க குழுவினர் கிருஷ்ணன், நகர மன்ற தலைவி வாணீஸ்வரி தேர் பவனியில் கலந்து கொண்டார். முன்னதாக நகர மன்ற உறுப்பினர் பிளோரினா மார்ட்டின் முயற்சியில் நகராட்சி துாய்மை பணியாளர்கள் ஆலய வளாகம் மற்றும் அன்னையின் தேர் சென்ற பாதையை சுத்தம் செய்தனர். விழாவிற்கான ஏற்பாடுகளை பங்கு குரு செல்வநாதன், உதவி பங்கு குருக்கள் ஜோசப், பிரெடி மற்றும் பங்கு பேரவை குழு செய்திருந்தனர். கொரோனா தொற்றுக்கு பின் இரண்டு ஆண்டுகளுக்கு பின் நடைபெரும் இந்த ஆலயத்தின் திருவிழாவை காண ஏராளமான மக்கள் குவிந்தனர்.

பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலை கேட்டு

சிறு குறு விவசாயிகள் விரைவில் உண்ணாவிரத போராட்டம் நடத்த முடிவு

குன்னூர், ஆக. 17: நீலகிரி மாவட்டத்தில் பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலையை நிர்ணயம் செய்ய கோரி சிறு குறு விவசாயிகள் விரைவில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட போவதாக அறிவித்துள்ளனர்.

நீலகிரியில் தேயிலைக்கு உரிய விலை கிடைக்கவில்லை என சிறு, குறு விவசாயிகள் பல்வேறு போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில் தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் முத்துக்குமார் விவசாயிகளுடன் ஆலோசனை நடத்தி உரிய முறையில் நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்திருந்தார். ஆனால் இது நாள் வரை

பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலையை நிர்ணயிக்க கோரி சிறு குறு விவசாயிகள் குன்னூரில் உள்ள தென்னிந்திய தேயிலை வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனால் பசுந்தேயிலை கிலோவிற்கு 7 ரூபாய் மட்டுமே கிடைப்பதால் சிறு மற்றும் குறு விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இந்த நிலையில் மலை மாவட்ட சிறு குறு விவசாயிகள் சங்க தலைவர் தும்பூர் போஜன், பொது செயலாளர் குல்லாகவுடர். துணை தலைவர் மூர்த்தி, கண்ணன், சதீஸ் பெள்ளன் மற்றும் செயலாளர்கள் சண்முகம், ஜெய்கணேஷ் ஆகியோர் நேற்று குன்னூரல் உள்ள தென்னிந்திய வாரிய அலுவலகத்தை திடீரென முற்றுகையிட்டனர்.

அப்போது அவர்கள் கூறியதாவது: பசுந்தேயிலைக்கு தென்னிந்திய தேயிலை வாரியம் குறைந்த பட்ச விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். அதற்காக எவ்விதமான போராட்டத்திலும் ஈடுபட தயாராக உள்ளோம்.

பசுந்தேயிலைக்கு உரிய விலை நிர்ணயிக்க கோரி வரும் நாட்களில் சிறு, குறு விவசாயிகள் தென்னிந்திய தேயிலை வாரியம் முன்பு உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட உள்ளோம், என தெரிவித்தனர்.

இவர்களின் திடீர் முற்றுகை போராட்டத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

கடந்த வாரம் பெய்த கன மழையில்

2 ஏக்கர் தேயிலை தோட்டம் பாதிப்பு

ஊட்டி, ஆக. 17: நீலகிரி மாவட்டத்தில் கடந்த வாரம் பெய்த மழையால், 2 ஏக்கர் பரப்பளவிலான தேயிலை தோட்டம் மற்றும் மலை காய்கறி தோட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தோட்டக்கலைத்துறையினர் தெரிவித்தனர்.

நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, கூடலூர், பந்தலூர் மற்றும் குந்தா வட்டாரங்களுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக மழை பெய்து வந்தது. கூடலூர் மற்றும் பந்தலூர் பகுதிகளில் கன மழை பெய்தது. ஊட்டி மற்றும் குந்தா வட்டாரங்களுக்குட்பட்ட பகுதிகளில் காற்றுடன் கூடிய மழை பெய்தது. இதனால், தேயிலை தோட்டங்கள் மற்றும் மலை காய்கறி தோட்டங்களில் தண்ணீர் தேங்கி நிற்பது மற்றும் மண் சரிவு ஏற்படுவது போன்ற பாதிப்புகள் ஏற்பட்டன. கூடலூர் மற்றும் பந்தலூர் பகுதிகளில் கன மழை பெய்ததால் தாழ்வான பகுதிகளில் உள்ள விவசாய நிலங்கள் தண்ணீரில் மூழ்கின.

இதனால், அங்கு பயிரிடப்பட்டிருந்த வாழை, நெல் மற்றும் இஞ்சி போன்ற பயிர்கள் பாதிக்கப்பட்டன. கடந்த ஒரு மாதமாக பெய்த மழையின் காரணமாக ஊட்டி மற்றும் குந்தா தாலுகா விற்குட்பட்ட பகுதிகளில் இரு ஏக்கர் தேயிலை தோட்டம், ஒன்றரை ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், கூடலூர் பகுதியில் சுமார் ஒரு ஏக்கர் பரப்பளவிலான வாழை பாதித்துள்ளது. மேலும், 1.7 ஏக்கர் பரப்பளவில் விவசாய நிலங்களில் தண்ணீர் தேங்கியதால், நெல் மற்றும் இஞ்சி போன்ற பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறுகையில், இம்முறை நீலகிரி மாவட்டத்தில் பெய்த மழையால் விவசாய நிலங்கள் மற்றும் தேயிலை தோட்டங்கள் பெரிய அளவில் பாதிக்கப்படவில்லை. ஒரு சில பகுதிகளில் லேசான பாதிப்பு மட்டுமே ஏற்பட்டது. ஊட்டி வட்டாரத்தில் சுமார் 2 ஏக்கர் பரப்பளவிலான தேயிலை தோட்டம் பாதிக்கப்பட்டுள்ளது. அதேபோல், எமரால்டு பகுதியில் ஒரு ஏக்கர் பரப்பளவிலான கேரட் தோட்டம், அரை ஏக்கர் பரப்பளவிலான பீட்ரூட் தோட்டம் பாதிக்கப்பட்டது.

கூடலூர் பகுதியில் 0.85 ஹெக்டர், 0.60, 1.79 ஹெக்டர் பரப்பளவிலான வாழைத் தோட்டம், நெல் மற்றும் இஞ்சி பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன, என்றனர்.

ICICI Home Finance

கார்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், ஐசிஐசிஐ எச்எஃப்சி டவர், அந்தேரி-குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு) மும்பை-400059, இந்தியா

கிளை அலுவலகம்: ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், முதல் தளம், கதவு எண் 66, ஜி.ஜி. டவர்ஸ், குமரன் சாலை, டவுண் ஹால் எதிரில், திருப்பூர்-641601

[விதி 8(6) விதிமுறையை காண்க]

அசையாச் சொத்துகள் விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு. இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாக மேலும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டு கடனீந்தோரிடம் அடமானம் வைக்கப்பட்ட/உரிமை அளிக்கப்பட்ட, ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் **அடையாளப்பூர்வ சுவாதீனம்** செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது இதன்கீழ் கொடுக்கப்பட்ட குறு விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

வ. எண்	கடன்தாரர்(கள்)/ உத கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர். கடன் கணக்கு எண்	தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கூடிய கடனீட்டுச் சொத்து(கள்) விவரங்கள்	நிலுவைத் தொகை	நிர்ணய விலை / முன்வைப்புத் தொகை	சொத்து பார்வையிடும் நாள் மற்றும் நேரம்	ஏலத் தேதி & நேரம்
(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ)	(ஊ)	(எ)
1.	M ஆனந்தன் (கடன்தாரர்) M சிவகாமி (உப-கடன்தாரர்) கடன் கணக்கு எண் NHTIR00000893786/ LHTIR00000843367/ NHTIR00000843368	கதவு எண் 5/23, SF எண் 137, பாளையக்காடு முதல் தெரு, கேவிஆர் நகர் பிரதான சாலை, கருவம்பாளையம், மங்கலம் சாலை தொலைவு, திருப்பூர் வட்டம் மற்றும் மாநகராட்சி, திருப்பூர் மாவட்டம்.	₹24,23,044/- 05 ஆகஸ்ட், 2022	Rs. 28,80,000/- Rs. 2,88,000/-	14 செப்டம்பர், 2022 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை	20 செப்டம்பர், 2022 பிற்பகல் 02.00 மணி முதல் 03.00 மணி வரை

இயங்குதள ஏலம் எங்கள் ஏல முகமை குளோப் டெக் இணையதளத்தில் (URL **இணைப்பு-** / https://BestAuctionDeal.com) நடத்தப்படும். அடமானதாரர்கள்/அறிவிக்கப்படுவோர் **19 செப்டம்பர், 2022 மாலை 05.00 மணிக்கு** முன்பு வரை மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைத்தொகைகளை செலுத்த ஒரு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது இல்லையெனில் இந்த கடனீட்டுச் சொத்துகள் மேற்கூறிய அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும்.

எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், முதல் தளம், கதவு எண் 66, ஜி.ஜி. டவர்ஸ், குமரன் சாலை, டவுண் ஹால் எதிரில், திருப்பூர்-641601** இடத்தில் **19 செப்டம்பர், 2022 மாலை 04.00 மணி** அல்லது அதற்கு முன்பு முன்வைப்புத்தொகை (EMD) RTGS/ கேட்பு வரைவோலை (DD) (நிரல் உ காண்க) சமர்ப்பிக்கலாம். எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) மேற்குறிப்பிட்ட காலத்தின்படி தங்கள் ஒப்பந்தப்புள்ளியை சமர்ப்பிக்க இயலவில்லை எனில் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் கையொப்பமிட்ட பிரதியானது **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், முதல் தளம், கதவு எண் 66, ஜி.ஜி. டவர்ஸ், குமரன் சாலை, டவுண் ஹால் எதிரில், திருப்பூர்-641601** இடத்தில் **19 செப்டம்பர், 2022 மாலை 05.00 மணி** அல்லது அதற்கு முன்பு சமர்ப்பிக்கப்படலாம் என்பதை கவனத்தில் கொள்ளவும். முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை (DD) ஒரு தேசியமயமாக்கப்பட்ட/ அட்டவணையிடப்பட்ட வங்கியிலிருந்து **திருப்பூரில்** மாற்றத்தக்க வகையில் **"ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்-ஏலம்"** என்ற பெயரில் பெறப்பட வேண்டும்.

சொத்து பார்வையிடுதல், ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து மேற்கொண்டு சந்தேகதீர்வுகளுக்கு, **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடை 7021072869** இல் அல்லது எங்கள் விற்பனை & சந்தைப்படுத்துதல் கூட்டாதார் **நெக்ஸென் சொலூசன்ஸ் பிரைவேட் லிமிடெட்** தொடர்பு கொள்ளவும்.

அதிகாரப்பூர்வ அதிகாரி எந்த மேற்கொண்டு காரணங்களையும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை கொண்டுள்ளார்.

விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, காண்க https://www.icicihfc.com/

நாள்: ஆகஸ்ட் 17, 2022
இடம்: திருப்பூர்

அதிகாரப்பூர்வ அதிகாரி
ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்

சுவாதீன அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டத்தின் பிற்சேர்க்கை IV [விதி 8(1)]

இவ்வாறிருக்க, கீழே கையொப்பமிட்டவர் ஸ்டாண்டர்டு சாட்டர்டு வங்கியின் அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி 22.04.2022 தேதியிட்ட ஒரு கோரிக்கை அறிவிப்பு வழங்கி கடன்தாரர் M/s. கார்த்திகேயன் அன் கோ, பிரதிநிதியாக அதன் கூட்டுதாரர் திரு. பெரியண்ண கவுண்டர் தங்கராஜு, எண் 217/315, அவினாசி சாலை, திருப்பூர் 641603. திரு. பெரியண்ண கவுண்டர் தங்கராஜு & பார்வதி தங்கராஜு, பழைய எண் 602, புதிய எண் 502, அவினாசி சாலை, கோல்டன் வளாகம், திருப்பூர் 641602 ஆகியோர் 21.04.2022 தேதிய ₹93,90,699.87/- (ரூபாய் தொண்ணூற்று மூன்று இலட்சத்து தொண்ணூறு ஆயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஒன்பது மற்றும் பைசா எண்பத்தேழு மட்டும்) என்ற அறிவிப்பில் குறிப்பிட்டத் தொகையை மேற்கூறிய அறிவிப்பு கிடைக்கப்பெற்றத் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறுக் கோரியிருந்தார்.

கடன்தாரர்/கள் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளார், இதன்மூலம் கடன்தார் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்டவர் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13 இன் உட்-பிரிவு 4 கீழ் அவருக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்துகளை இந்த 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11 ஆம் தேதியில் அடையாளப்பூர்வ சுவாதீனம் செய்துள்ளார்.

கடனீட்டுச் சொத்துகளை மீட்பதற்கு, கால அவகாசம் கிடைக்கப்பெறுதல் குறித்த, சட்டத்தின் பிரிவு 13 இன் உட்-பிரிவு 8 விதிகள் கடன்தாரர் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன.

கடன்தாரருக்கு குறிப்பிட்டு மேலும் பொதுமக்களுக்கு பொதுவாக இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது சொத்துடன் பேர நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் மேலும் சொத்துடனான அனைத்து பேர நடவடிக்கைகளும் ₹97,35,374.81/- (ரூபாய் தொண்ணூற்றேழு இலட்சத்து முப்பத்தைந்து ஆயிரத்து முந்நூற்று எழுபத்து நான்கு மற்றும் பைசா எண்பத்தொன்று மட்டும்) மற்றும் அதற்குரிய வட்டி ஆகிய தொகைக்காக ஸ்டாண்டர்டு சாட்டர்டு வங்கியின் வசூலுக்கு உட்படும்.

அசையா சொத்து விவரம்

இனம் எண் 1

திருப்பூர் பதிவு மாவட்டம், திருப்பூர் இணை-1 சார்-பதிவு மாவட்டம், திருப்பூர் வட்டம், திருப்பூர் நகர், வார்டு எண் 3, அவினாசி சாலை, தொட்டிப்பாளையம் கிராமத்தில், S.F. எண் 107/2, டி.எஸ். எண் 445/1, (டி.எஸ். வார்டு B, பட்டாப்படி டி.எஸ். வார்டு K, புதிய டி.எஸ். எண் 66 பிளாக், எண் 23, வார்டு எண் 1) மனை எண் 11

இதில் நடுப் பக்கத்திலான பகுதி எல்லைகள் பின்வருமாறு:
மனை எண் 1 தெற்குப் பகுதியின் வடக்கு
மனை எண் 11 வடக்குப் பகுதியின் தெற்கு
மனை எண் 10 ஒரு பகுதியின் கிழக்கு
தென்வடல் அவினாசி சாலையின் மேற்கு
மேற்கூறியதற்குள்
கிழக்கு மேற்காக வடக்கில் : 69.3/4 அடி
கிழக்கு மேற்காக தெற்கில் : 72 அடி
வடக்கு தெற்காக மேற்கில் : 14.1/2 அடி
வடக்கு தெற்காக கிழக்கில் : 11 அடி
விஸ்தீரணம் 903 சதுரடி வீட்டு மனை அதில் கட்டப்பட்ட கட்டிடங்கள், அதன் கதவுகள், பொருத்துகள், சாதனங்கள், ஏனையவற்றுடன் மேலும் பாதை உரிமைகளுடன்.

இனம் எண் 2

திருப்பூர் பதிவு மாவட்டம், திருப்பூர் இணை-1 சார்-பதிவு மாவட்டம், திருப்பூர் வட்டம், திருப்பூர் நகர், வார்டு எண் 3, அவினாசி சாலை, தொட்டிப்பாளையம் கிராமத்தில், S.F. எண் 107/2, டி.எஸ். எண் 445/1, (டி.எஸ். வார்டு B, பட்டாப்படி டி.எஸ். வார்டு K, புதிய டி.எஸ். எண் 66 பிளாக், எண் 23, வார்டு எண் 1) மனை எண் 11

இதில் வடக்குப் பக்கத்திலான பகுதி எல்லைகள் பின்வருமாறு:
மனை எண் 11 நடுப் பகுதியின் வடக்கு
அம்மாசை கவுண்டர் மற்றும் வள்ளியம்மாள் அவர்கள் சொத்தின் தெற்கு
மனை எண் 10 பகுதியின் கிழக்கு
தென் வடல் அவினாசி சாலையின் மேற்கு
மேற்கூறியதற்குள்
கிழக்கு மேற்காக வடக்கில் : 67.1/2 அடி
கிழக்கு மேற்காக தெற்கில் : 69.3/4 அடி
வடக்கு தெற்காக மேற்கில் : 14.1/2 அடி
வடக்கு தெற்காக கிழக்கில் : 11 அடி
விஸ்தீரணம் 875 சதுரடி வீட்டு மனை அதில் கட்டப்பட்ட கட்டிடங்கள், அதன் கதவுகள், பொருத்துகள், சாதனங்கள், ஏனையவற்றுடன் மேலும் பாதை உரிமைகளுடன்.

நாள்: 11.08.2022
இடம்: திருப்பூர்

அதிகாரப்பூர்வ அதிகாரி
ஸ்டாண்டர்டு சாட்டர்டு வங்கி